(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) **காலை உணவு :** கோதுமை உப்புமா அல்லது பொங்கல், அல்லது கோதுமை நொய் அல்லது அரிசி நொய்யை வறுத்து உடைத்த பச்சைப்பயிறு 4 : 1 என்ற விகிதத்தில் கலந்து சமைத்த கஞ்சி அத்துடன் ஊறுகாய் அல்லது சட்டினி.

பகல் உணவு : சோறு, சாம்பார் அல்லது வேறு குழம்பு, அத்துடன் காய்கறிப் பதார்த்தம், மோர்.

மாலையில் : வேகவைத்து உப்பிட்ட பயிறு (சுண்டல்).

இரவு உணவு : சோறு, காய்கறிப்பொறியல், ரசம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவரவர்களே, இதற்கு முன்பு என்னென்ன உணவுகள் கொடுக்கப்பட்டு வந்தன ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, இதற்கு முன்பு ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் இருபது ரூபாய் என்ற அளவில் வழங்கப்பட்டு வந்தது. இத்தொகையில் வேண்டிய சத்துணவு அளிக்கப்பட முடியவில்லை என்ற காரணத்தினால், இத் தொகை ரூபாய் இருபத்தைந்து என உயர்த்தப்பட்டது. முதலில் அரிசியை அதிகமாகத் தந்தார்கள். ஆனால் அதில் சத்தில்லை என்ற காரணத்தினால் 'சத்துணவு' எப்படிப்பட்ட திட்டத்தில் கொடுக்க முடியும் என்று யோசித்து பூந்தமல்லியிலுள்ள பொதுச் சுகாதார நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு இந்த முறையில் உணவு அளிக்கப்பட்டு வருகிறது. இந்த உணவுத் திட்டம் எல்லா விடுதிகளிலும் இப்போது நடைமுறையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Operation of buses in Nationalised Zones

* 114 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there were any discussions between the representatives of this Government and Mysore Government for operating buses in Nationalised Zones; and

(*b*) if so, the details thereof?

1972 ஆகஸ்ட் 19]

நாட்டுடைமையாக்கப்பட்ட மண்டலங்களில் பேருந்துகள் ஓட்டுவது

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாட்டுடைமையாக்கப்பட்ட மண்டலங்களில் பேருந்துகள் ஓட்டுவது குறித்து தமிழ்நாடு அரசு, மைசூர் அரசுப் பிரதிநிதிகளிடையே எவையேனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டனவா ?

(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (அ) ஆம்.

(இ) ஓர் வரைவு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. இவ்வொப்பந்தம் அரசு ஆணை எண் 1649 உள்துறை, தேதி 20—6—1972-ல் எதிர்ப்பு ஏதேனும் இருந்தால் 26—7—1972-க்குள் இவ்வொப்பந்தத்திற்கு மறுப்போ அன்றி ஆலோசனைகளோ இருப்பின் தெரிவிக்குமாறு கோரி, வெளியிடப்பட்டது. சில போக்குவரத்து உரிமையாளர்கள் தங்கள் மறுப்புகளை தெரிவித்திருக்கிறார்கள். இவைகள் அரசின் பரிசிலனையிலுள்ளன. இம்மறுப்புகளின் பேரில் முடிவெடுத்தவுடன், இவ்வரைவு ஒப்பந்தம் உறுதி செய்யப்படும்.

Impounding of buses by the Police.

*115 Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Police impounded a number of buses in this State about 14th January 1972; and

(b) if so, the details thereof?

காவல் துறை கைப்பற்றிய பேருந்துகள்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 ஜனவரி 14 ஆம் நாள் அளவில் இம்மாநிலத்திலுள்ள பல பேருந்துகளைக் காவல் துறை கைப்பற்றி வைத்துக் கொண்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?